| | | |
|---|---|---|
| தரம் **04** | பாடசாலை மட்ட இறுதி மதிப்பீடு - 2022(2023)<br>**தமிழ் மொழி** | புள்ளிகள் |

சுட்டெண்: ☐☐☐☐☐☐ நேரம்: 1.30 மணித்தியாலம்

**01. பின்வரும் பந்தியை வாசித்துப் பந்தியைத் துணையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.**

மாதவன் காலையில் வகுப்பிற்கு வந்தபோது அங்கு வேறு எவரும் வந்திருக்கவில்லை. புத்தகப் பையை மேசைமீது வைத்துவிட்டு அவன் துடைப்பானை எடுத்து வகுப்பைச் சுத்தம் செய்யத் தொடங்கினான். அதன் பின்னர் வந்த பீற்றர் அவனுக்கு உதவி செய்தான். அடுத்ததாக வந்த சாந்தி பூச்சாடியில் இருந்த பூக்களை அகற்றிவிட்டுப் புதிய பூக்களைச் செருகினாள். அதன் பின்னர் வந்த கரீம் மேசைகளையும் கதிரைகளையும் ஒழுங்குபடுத்தி வைத்தான்.

(1) மாதவன் காலையில் வகுப்பிற்கு வந்தபோது வகுப்பில் இருந்தவர் யார்?

………………………………………………………………………………………

(2) வகுப்பைச் சுத்தம் செய்தவர் யார்?

………………………………………………………………………………………

(3) பூச்சாடியை ஒழுங்கு செய்தவர் யார்?

………………………………………………………………………………………

(4) “செய்தான்” எனும் சொல் குறிக்கும் காலம் யாது?

………………………………………………………………………………………

(5) பெயரடைமொழிச் சொல் ஒன்று தருக?

………………………………………………………………………………………

(6) பூ+சாடியில் என்பதைச் சேர்த்தெழுதினால்?

………………………………………………………………………………………

(7) வகுப்பிற்குக் கடைசியாக வந்தவர் யார்?

………………………………………………………………………………………

(8) காலப் பெயர்ச்சொல் ஒன்று தருக?

………………………………………………………………………………………

**02. சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லின் கீழ்க் கோடிடுக.**

(1) தொழிலாழி தொழிலாளி தொழிலாலி

(2) பரிசளிப்பு பரிசழிப்பு பரிசலிப்பு

**03. இடைவெளிக்குப் பொருத்தமான தொனி மரபு சொல்லின் கீழ்க் கோடிடுக.**

(1) கரடி .................. (உறுமும், சீறும், கத்தும்)

(2) குரங்கு .................. (அலறும், அலப்பும், சொல்லும்)

**04. இணைப்போம்**

| | |
|---|---|
| (1) அரசன் வாழுமிடம் | சிறிய |
| (2) இரட்டைக் கிளவி | எலும்பும் தோலும் |
| (3) அடுக்குமொழி | அரண்மனை |
| (4) இணைமொழி | கல கல |
| (5) அடைமொழி | வண்ண வண்ண |

**05. ஒத்த சொல் தருக?**

(1) பசளை .....................

(2) புனல் .....................

(3) கழனி .....................

(4) ஆகாயம் .....................

**எதிர்ச்சொல்**

(1) இம்மை .....................

(2) இரவு ......................

**06. சுருக்கக் குறியீடின் விரிவினை எழுதுக.**

(1) பி.கு. .........................................................................

(2) இ.போ.ச. .........................................................................

(3) ம.ப.பா. .........................................................................

**07. சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியம் எழுதுக.**

(1) கற்றுக் / கோபத்தைக் / வாழலாம் / கொண்டால் / கட்டுப்படுத்தக் / சிறப்பாக

...........................................................................................................

(2) ஆத்திசூடியானது / மிக / இனிமையாகவும் / கற்பதற்கு / இருக்கின்றது எளிமையாகவும்

...........................................................................................................

**08. பின்வரும் பழமொழிகளின் கருத்தினை எழுதுக.**

(1) உப்பிட்டவரை உள்ளவும் நினை

……………………………………………………………………………………

(2) சிறுதுளி பெரு வெள்ளம்

……………………………………………………………………………………

(3) இளங்கன்று பயமறியாது

……………………………………………………………………………………

**09. அட்டவணையைப் பூரணப்படுத்துக.**

| **வினையடி** | **இறந்தகாலம்** | **நிகழ்காலம்** | **எதிர்காலம்** |
|---|---|---|---|
| 1. படி | படித்தேன் | ………………….. | ………………….. |
| 2. விழு | ………………….. | ………………….. | விழுவேன் |
| 3. வரை | ………………….. | வரைகின்றேன் | ………………….. |

**10. ஆண்பால் வாக்கியங்களைப் பெண்பால் வாக்கியமாக மாற்றி எழுதுக.**

(1) அரசன் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தான்.

……………………………………………………………………………………

(2) மாமா கொழும்பிற்குச் சென்றார்.

……………………………………………………………………………………

**11. கீழ்வரும் வாக்கியத்தைப் பயன்படுத்தி இடைவெளி நிரப்புக.**

சிறுவர்கள் உணவு உண்கின்றார்கள்.

திணை : ……………………………………………………………

பால் : ……………………………………………………………

எண் : ……………………………………………………………

இடம் : ……………………………………………………………

காலம் : ……………………………………………………………

**12. பாடநூலைத் துணையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.**

(1) தாளைக் கொடுத்தால் உண்ணும் தண்ணீர் கொடுத்தால் மடியும்.

……………………………………………………………………………………………

(2) "பேதைமை அகற்று" எனும் ஆத்திசூடியின் பொருள் யாது?

……………………………………………………………………………………………

(3) வாழ்க்கையில் எம்மை நல்வழிப்படுத்துபவர்கள் யாவர்?

……………………………………………………………………………………………

**13. பின்வரும் படத்தை அவதானித்து நிகழ்காலத்தில் மூன்று வாக்கியம் எழுதுக**



(1) ……………………………………………………………………………………………

(2) ……………………………………………………………………………………………

(3) ……………………………………………………………………………………………